திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, மண்டபம் இடிந்து விழுந்துவிட்டக் காரணத்தினால் மாசி திருவிழா இதில் நடைபெறுவது நிறுத்தப்பட்டது. அதற்குப்பிறகு சில ஆண்டுகள் மண்டபத்திற்கு முன்னால் பந்தல் அமைக்கப்பட்டு அதில் திருவிழா நடந்தது. இப்போது அதுவும் நிறுத்தப்பட்டு விட்டது. ஆகவே திருவிழா இந்த மண்டபத்தில் நடைபெறும் வகையில் அரசு ஏற்பாடுகள் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்டபத்தை உபயோகப்படுத்துகிற முறை பற்றி ஆலய நிர்வாகிகள், ஆலய அறங்காவலர்களாலே தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்று. கடந்த 18 ஆண்டுகளாக அது உபயோகமில்லாமல் இருக்கிறது என்பதாலே தான் அது பழுதடைந்து இருக்கிறது. மேலும் இரண்டு இலட்சம் ரூபாய் வரையில் செலவாகும் என்று திட்டமிட்டு அந்தத் செலவை செய்ய வேண்டாமென்று முடிவு எடுத்திருக்கிறார்கள் என்ற குறிப்பு இருக்கிறது. ஒருவேளை மீண்டும் அதை பயன்படுத்து வதால் நலன் பயக்கும் என்ற எண்ணம் இருக்குமேயானால் அந்த மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கும், அதனுடைய அறங்காவலர்களுக்கும் அறநிலையத் துறை மூலமாக இந்த செய்தியைச் சொல்லி, பயனளிக்கும் வகையில் இருந்தால் அந்த நடவடிக்கையை மேற்கொள்ளும்படி அறங்காவலர்களையும், ஆலய நிர்வாகத்தையும் அறநிலையத் துறை கேட்டுக் கொள்ளும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளம் வருகின்ற காலத்தில் வைகை ஆற்றில் மக்கள், வெள்ளத்தினால் அடித்துச்செல்லப் படாமல் இருப்ப தற்காக இந்த மண்டபத்தில் ஒதுங்கி நிற்கிறார்கள். ஆதலால் புயல் பாதுகாப்பு இல்லம் மாதிரி அந்த மணடபத்தை வெள்ளப் பாதுகாப்பு இல்லமாக வைகையாற்றின்கரையிலே அமைக்கக்கூடிய வகையிலே அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மணடபம் வைகையாற்றின் நடுவிலே இருக்கிறது, ஆகவே வெள்ளப்பாதுகாப்பு மண்டபமாக அது இல்லை. ஆண்டவன் அங்கே போயத் தங்கி விசேஷங்கள் நடத்துவதற்காகத்தான் அந்த மண்டபங்கள் எழுப்பப்பட்டிருக் கின்றன.

தொப்பையாற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 677 திரு. செ. செம்மலை: மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) தொப்பையாற்றின் குறுக்கே நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பாலம் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது?

1981 ஏப்ரல் 14]

(ஆ) அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு?

(இ) பாலம் கட்டும் பணி எப்போது முடிவடையும்?

மாண்புமிகு. திரு ப. குழந்தைவேலு ; (அ) வேலை நடைபெற்று வருகிறது.

(ஆ) மொத்த மதிப்பீடு ரூ. 7,72,700.

(இ) 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொப்பையாற்றுப் பாலம் சேலம் மாவட்டத்தையும் தர்மபுரியையும் இணைக்கின்ற ஒரு இணைப்புப் பாலமாக இருக்கிறது. 1976 ஆம் ஆண்டிலேயே அதற்கு அரசு அனுமதி வழங்கியும்கூட வேலைகள் 4 ஆண்டுக்காலத்திற்கு மேலாக முடியாத நிலையில் இருக்கின்றன. ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் நீக்கப்பட்டு இருக்கிறார். என்ன காரணத்தினால் நீக்கப்பட்டது என்பதையும் இப்போது எந்த முறையிலே ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு தண்ணீர் விடப்படுவதால் மேற்குறிப்பிட்ட பாலம் கட்டப்படவேண்டிய இடத்திலே தண்ணீர் எப்போதும் 10 அடி தேங்கியிருக்கிற காரணத்தினால் மேற்கொண்டு வேலை செய்ய முடியவில்லை. அந்த தொந்தரவின் காரணமாகத் தான் அந்த ஒப்பந்தக்காரர் பின்வாங்கி விட்டார். அதற்குப் பின் அந்த ஒப்பந்தம் காலாவதியாகி, புதிய ஒப்பந்தத்தில் பெரியண்ணக் கவுண்டர் இப்போது ஒப்பந்தக்காரர் ஆகி அந்த வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது,

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எனக்கு வந்த சில புகார்கள் அடிப்படையிலே ஒப்பந்தக்காரர்களுக்கும் அங்கே பணிபுரிகின்ற அதிகாரிகளுக்கும் இருக்கிற கருத்துவேற்றுமைகளினால் வேலை தாமதப்படுவதாக அறிகிறேன். அப்படியிருப்பின் அதிகாரிகள் அதை கவனித்து அமைச்சர் சொன்ன அந்த காலக்கெடுவிற்குள்ளாக அந்த வேலையை முடிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆம்பூர்—துத்திப்பட்டு இடையே பாலாற்றின் குறுக்கே மேம்பாலம்

*வினா எண். 678 — திரு, ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—